*கவனிக்க.- 31.08.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2036 - 2017 සැප්තැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2017.09.08

*2036 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1328 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** முத்திப்பேறுக்கான பெரும்சுவர் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்)சட்டமூலம் 2017, ஒகத்து மாதம் 31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2017, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால்மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1327- B81206 - 5,403 (2017/09)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண சபை அரச சேவையின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்பம் அல்லாத - தொகுதி 02 சேவை பிரிவின் விடுதிப் பணிப் பெண் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

1. வடமேல் மாகாண சபையின் அரச சேவையின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை திணைக்களத்தின் விடுதிப் பணிப் பெண் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தகைமை வாயந்த வடமேல் மாகாணத்தினுள் நிரந்தரமான வதிவைக் கொண்ட இலங்கைப் பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறன.

2. இந்தப் பரீட்சை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையம் ஒன்றில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சையைப் பிற்போடுவதற்கும், இரத்துச் செய்வதற்கும் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

3. **சம்பள அளவுத் திட்டம் :-** 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்தின் I ஆவது உப பிரிவின் கீழ் மேற்படி பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் MN-1-2016 இன் படி ரூ.27,140-10X300-11X350-10X495-10X660-ரூ.45,540 ஆகும். எனினும் 2020.01.01 வரை அந்தச் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கமை வாக அதன் II ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் வழங்கப்படும்.

4. (அ) **கல்வித் தகைமைகள் :**

1. க.பொ. த (சா./த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறு பாடங்கள் இரண்டுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

2. க. பொ.த (உ./த) பரீட்சையில் குறைந்த பட்சம் ஒரு (01) பாடத்திலேனும் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

(ஆ) **ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்கு நிலையான வதிவைக் கொண்டிருக்க வேண்டும். (விண்ணப்பதாரி வடமேல் மாகாணத்தில் 03 வருடங்களுக்குக் குறைவில்லாத காலம் நிலையான வதிவைக் கொண்ட ஒருவரைத் திருமணம் செய்திருப்பின் வாழ்க்கைத் துணையின் நிலையான வதிவு கவனத்தில் கொள்ளப்படும்.)

(ii) சகல விண்ணப்பதாரிகளும் பதவிப் பொறுப்புக்களை செய்வதற்குத் தகுந்த உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

(iii) ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான சகல தகைமைகளையும் 2017.10.06 ஆந் திகதிக்குப் பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும்.

(iv) 2017.10.06 ஆந் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

5. **சேவை விதிமுறைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

(ii) இப்பதவி 03 வருட தகுதி காண் காலத்திற்கு உட்பட்டாகும்.

(iii) பொது நிர்வாக சுற்று நிருப இலக்கம் 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின்படியும் பணியிலமர்ந்து 05 வருடங்களுக்குள் ஊடக மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி/மொழிகளில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

(iv) வடமேல் மாகாண அரச சேவையின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் விடுதிப் பணிப் பெண் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பதவி உயர்வு வழங்கல் ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

(v) இந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்பு/பதவி உயர்வு ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள், நிதிப் பிரமாணங்கள், வடமேல் மாகாண நிதி விதிமுறைகள், வடமேல் மாகாண ஒழுக்க செயற் பிரமாணம், வடமேல் மாகாண செயல் ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் மற்றும் அரச மற்றும் மாகாண சபை மூலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை :**
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு மூலம் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர் முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற் கொள்ளப்படும். வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 70% பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நிரப்பப்படும். பின்வரும் பரீட்சை பாடத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் அவர்களின் திறமையில் அடிப்படையில் வரிசைப்படுத்தலின் அடிப்படையிலும், வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

7. எழுத்து மூலப் பரீட்சைக்குரிய விபரங்கள் பின்வருமாறு அமையும்.

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவ தற்கு வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. பொது அறிவு மற்றும் பொது உளச் சார்பு | பொது அறிவு மற்றும் பொது உளச் சார்பை மதிப்பீடு செய்யும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாப்பத்திரம். | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உடல் உள விருத்தி தொடர்பான அறிவு | விடுதியில் தங்கும் பிள்ளை ஒன்றின் பொறுப்பு மற்றும் பாதுகாப்பு, சிறுவர் உள விருத்தி தொடர்பான பொதுவான அறிவு, சிறுவர் சுகாதாரம் மற்றும் சிறுவர் ஆலோசனை தொடர்பான அறிவைப் பரீட்சிக்கும் வினாப்பத்திரமாகும். | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40 |

8. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| பாடங்கள் | உச்ச புள்ளி அளவு |
|---|---|
| 1. அரசின் தடுப்பு இல்லம் ஒன்றில் அல்லது பொறுப்பேற்கும் இல்லம் ஒன்றில் அல்லது உறுதிப்படுத்திய பாடசாலை ஒன்றில் ஒப்பந்த அடிப்படையில் அல்லது சேவை ஒப்பந்தத்தின் கீழ் விடுதிப் பணிப் பெண், பொறுப்பாளர், உதவிப் பொறுப்பாளர் ஆக ஓராண்டுக்குக் குறையாத காலம் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும். | 50 |
| 2. துறை தொடர்பில் பெற்றுள்ள பயிற்சிப் பாட நெறிகள், அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக 6 மாதங்களுக்கு மேற்பட்ட டிப்ளோமா பாடநெறி அல்லது 6 மாதங்களுக்கு மேற்பட்ட தாதிப் பயிற்சி டிப்ளோமா பாடநெறி ஒன்றைப் பயின்றிருத்தல் (25 புள்ளிகள்)<br>அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக 06 மாதங்களுக்கு மேற்பட்ட சான்றிதழ் பாடநெறி அல்லது 6 மாதங்களுக்கு மேற்பட்ட தாதிப்பயிற்சிப் பாடநெறி ஒன்றைப் பயின்றிருத்தல். (15 புள்ளிகள்) | 40 |

| | |
|---|---|
| (இங்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் என்பது தேசிய அபிலிருத்தி நிறுவனம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாகும்) | |
| ஏனைய திறமைகள்<br>அரசின் மூன்றாம் மற்றும் தொழில் ஆணைக் குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் 03 மாதங்களுக்கு மேற்பட்ட கால கணினிப் பயிற்சிப் பாடநெறி அல்லது மனித வள முகாமைத்துவப் பாடநெறி (ஒரு பாடநெறிக்கு 05 புள்ளிகள் வீதம் அதிக பட்சமாக 02 பாடநெறிகளுக்கு) | 10 |
| மொத்தம் | 100 |

9. **பரீட்சைச் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்கப்படுமாறு வதிவிடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளும் வமே.மா.ச.நி 2 பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதுடன், எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்த பரீட்சைக் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துவதற்கு மாற்றப்பட முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

10. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

10.1. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக A4 தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2017.10.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தின் விடுதிப் பணிப் பெண் பதவிக்கான ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை - 2017" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

10.2 ஏற்கனவே, அரச சேவையில் உள்ள ஒருவராயின் தமது விண்ணப்பத்தை உரிய நிறுவனத் தலைவரின் ஊடாக முன்வைக்க வேண்டும்.

10.3 மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, உரிய தகவல்கள் உள்ளடக்கப்படாத, பூரணமற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றின் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

11. விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.10.06 ஆகும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதி அட்டை அனுப்பப்படுதல் என்பது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கான தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டமை ஆகாது. தகைமையை உறுதி செய்வதற்கான உரிய ஆவணங்களின் மூலப் பிரதியை நேர்முகப் பரீட்சையின்போது முன்வைக்க வேண்டும். சகல விண்ணப்பதாரிகளினதும் பதவிக்கான சகல தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டதாக இருத்தல் கட்டாயமானது.

13. **பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதி செய்தல் :**
பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களிற்காகவும் ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் ஒன்றின் மூலம் உறுதி செய்ய வேண்டும் :-
1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
2. செல்லுபடியான கடவுச் சீட்டு.
**குறிப்பு** :- பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரி தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

14. எவரேனும் ஒரு பரீட்சார்த்திக்கு தமது அனுமதி அட்டை பரீட்சைக்கு 07 நாட்களுக்கு முன்னர் கிடைக்கப் பெறவில்லையாயின் அது தொடர்பில் உடனடியாக "செயலாளர், வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகக் கட்டிடத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது பின்வரும் விடயங்கள் முன்வைக்கபட வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ;
(இ) முகவரி ;
(ஈ) விண்ணப்பத்தை அனுப்பிய முகவரி, பதிவுத் தபால் இலக்கம் மற்றும் திகதி.

15. ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகைமையற்றவர் என்பது பதவி வழங்குவதற்கு முன்னர் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தெரிய வந்தால் அவரது பரீட்சார்த்தகத் தன்மை இரத்துச் செய்யப்படும். பதவி கிடைத்த பின்னர், தெரிந்து கொண்டு பொய்யான தகவல்களை வழங்கியோ அல்லது உண்மைத் தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டு இருப்பது தெரிய வந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

16. விண்ணப்பம் கோரும் அறிவித்தலுடன் தொடர்புள்ள விடயங்கள் மற்றும் இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏனைய விடயங்கள் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

17. இந்தப் பரீட்சையை நடாத்துதல் அல்லது நடாத்தாமல் விடுதல் தொடர்பில் அல்லது நடாத்தியபின்னர் தெரிவு செய்தல்/ தெரிவு செய்யாமல் விடல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும் அவ்வாறே இந்த அறிவித்தலில் ஏற்பாடுகள் இல்லாத விடயங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

வட மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு (வடமேல்),
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.
2017, ஓகத்து 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண அரச சேவையின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்பம் அல்லாத- தொகுதி 02 சேவைப் பிரிவின் விடுதிப் பணிப் பெண் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2017**

சுட்டெண் [ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :- ........................................
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :- ........................................
1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :- ........................................
1.4 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :- ........................................

1.5 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

02. 2.1 நிரந்தர முகவரி :- ....................................

2.2 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :- .............................................

2.3 தொலைபேசி இலக்கம் : தனிப்பட்ட :- ....................................... அலுவலக :- .........................................

03. பிறந்த திகதி : ஆண்டு :- ................... மாதம் :- .............................. திகதி :- ...................................

04. விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 03.03.2017 அன்று வயது :

வருடம் : ................... மாதம் : .............................. நாட்கள் : ...................................

05. 2017.10.06 ஆந் திகதிக்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவுக் காலம்

வருடம் : ................... மாதம் : .............................. நாட்கள் : ...................................

06. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் (விண்ணப்பங் கோரல் அறிவித்தலின் 04 இல் குறிப்பிட்டுள்ள படி)

க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய வருடமும், பரீட்சை இலக்கமும்.

வருடம் :- ................... சுட்டெண் :- ..............................

| பாடம் | பெற்றுக் கொண்ட பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு, மற்றும் சுட்டெண்.

ஆண்டு :- ................... சுட்டெண் :- ..............................

| பாடம் | பெற்றுக் கொண்ட பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

07. அறிவித்தலின் 8 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள படி அனுபவம் :

..............................................................................................................

துறை சார் பாடநெறிகள் :

..............................................................................................................

ஏனைய தகைமைகள் :

..............................................................................................................

08. பரீட்சைக் கட்டண பற்றுச் சீட்டு இலக்கம் :- ....................................................
திகதி :- ..............................................
பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்ட பிரதேச செலயலாளர் அலுவலகம் :- ................................

| பற்றுச் சீட்டினை இவ்விடத்தில் கழராதவாறு ஒட்டவும் |
| --- |

09. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

................................ ஆகிய என்னால் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு உண்மை என்றும், ................. ஆந் திகதிய ........... ஆம் இலக்க பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பரீட்சை விதிமுறைகளுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், இந்தப் பரீட்சையின் விதிமுறைகளின் படி தகைமையற்றவர் என அறியவந்தால் பரீட்சைக்கு முன்னரோ, பின்னரோ எனது பரீட்சார்த்தத்தன்மை இரத்துச் செய்யப்படும் தீர்மானத்தை ஏற்றுக் கொள்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு மூலம் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு கீழ்படிவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி - ............................... ............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்ததை உறுதி செய்தல்

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி ...................................... ............................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ..................................... ஆந் திகதி என் முன்னிலையில் தமது கையொப்பத்தை வைத்தார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

............................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :- ............................................

பதவி : ............................................
(உத்தியோகபூர்வ முத்திரை)

(இந்த உறுதிப்படுத்தல் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமான ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர் அல்லது ரூபா 240, 360 க்கு மேற்பட்ட வருடாந்த வருமானத்தைப் பெறும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

அரச சேவையில் தற்போது சேவையாற்றும் விண்ணப்பதாரிகளின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

(தேவையற்றதை வெட்டி விடவும்)

திரு./ திருமதி/ செல்வி ........................................................ அவர்கள் தற்போது .............................................. அமைச்சில்/ திணைக்களத்தில் / நிறுவனத்தில் .............................................. நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ளார் என்பதையும், அவர் அரச சேவையில் இருந்து நீக்கப்பட்டவர் அல்ல என்றும், அனுதாப மாற்றுத் தெரிவின் அடிப்படையிலோ அல்லது செயற்திறன் இன்மை காரணமாக ஓய்வில் அனுப்பப்பட்டவர்/அனுப்பப்படாதவர் என்பதையும் பதவியை விட்டுச் சென்றவராக கருதப்படுபவர் / கருதப்படாதவர் என்பதையும் உறுதி செய்வதோடு, இந்தப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் அவர் தற்போது சேவையில் உள்ள பதவியில் இருந்து விடுவிப்பு வழங்க முடியும்/முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி - ............................... ..........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

9-328

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆ வது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு***.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்***.

***அட்டவணை-2017***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 08.09.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.08.2017 |
| | | வெள்ளி | 15.09.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 31.08.2017 |
| | | வெள்ளி | 22.09.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.09.2017 |
| | | வெள்ளி | 29.09.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.09.2017 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 06.10.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.09.2017 |
| | | வெள்ளி | 13.10.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.09.2017 |
| | | வெள்ளி | 20.10.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.10.2017 |
| | | வெள்ளி | 27.10.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.10.2017 |
| **நவெம்பர்** | .. | வியாழன் | 02.11.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.10.2017 |
| | | வெள்ளி | 10.11.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.10.2017 |
| | | வெள்ளி | 17.11.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 02.11.2017 |
| | | வெள்ளி | 24.11.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.11.2017 |
| | | வியாழன் | 30.11.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.11.2017 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.